சார்பு நீதிமன்றம் ,பெருந்துறை, ஈரோடு மாவட்டம்

முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| அ வ எண் 108/16 |
| வா.சா.1(பழனிசாமி) |
| நாள் 11.12.18 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சுமார் 65 வயதிருக்கும். எனது வயது சரியாக தெரியாது. தாவா சொத்துக்கள் சிங்காநல்லூர் கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண் 165 ஆகும். அது பழைய சர்வே எண்ணாகும். புதிய ரீச தெரியாது. ஆனால் சப் டிவிசன் ஆகியுள்ளது. தாவா சொத்துக்கள் விஸ்தீரணம் 9 ஏக்கர் 73 சென்ட். அதில் எனக்கு 16 ல் 2 பாகம் எனக்கு. 1 ஏக்கர் 21 சென்ட் ஆகும். 2ம் பிரதிவாதி சென்னியப்பனுக்கு 1ஏக்கர் 21 சென்ட் பாகம் வரும். மீதி 1ம் பிரதிவாதி ராமசாமிக்கு 1 ஏக்கர் 21 சென்ட் வரும். ராசம்மாளுக்கு 4/16 பாகம் பாத்தியம். அதில் நான் 2/16 பாகத்தை வாங்கி விட்டேன். மீதி 2/16 பாகத்தை ராசம்மாளிடம் இருந்து என் தம்பி 2ம் பிரதிவாதி சென்னியப்பன் வாங்கி விட்டார். என் அப்பா முத்துக்கவண்டருக்கு 2/16 பாகம் உள்ளது. அவருக்கும் இதில் 1 ஏக்கர் 21 சென்ட் உள்ளது. மொத்தமாக எங்கள்குடும்பத்திற்கு 4 ஏக்கர் 86 1/2 சென்ட் பாத்தியம். மீதி 4 ஏக்கர் 86 1/2 சென்ட் இடம் ஒரு ராமசாமி கவுண்டருக்கு பாத்தியம். அவருக்கு 8/16 பாகம் இதில் பாத்தியம் . நான் மொத்தமாக 9 ஏக்கர் 73 சென்டில் ஒரு ஏக்கர் 21 1/2 செனட் இடத்தை பொதுவில் வாங்கினேன். 4 ஏக்கர் 86 1/2 சென்ட் ஆதியில் ராமசாமி பிள்ளை,அவரின் மகன்கள் ரங்கசாமி பிள்ளை, கல்யாண சுந்தரம்பிள்ளை,கிருஸ்ணசாமி பிள்ளை , ராஜரத்தினம் பிள்ளை ஆகியோருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அவர்களுக்கு 4 ஏக்கர் 86 1/2 செனட் பாத்தியப்பட்டிருந்தது என்பதற்கான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. என் அப்பா முத்தகவுண்டர் 1 ஏக்கர் 21 சென்டை ராமசாமி பிள்ளை மகன் கந்தசாமி பிள்ளையிடமிருந்து வாங்கினார். என் அப்பா சொத்தை வாங்கும் முன்பு மூல ஆவணங்களை பார்த்தாரா இல்லையா என்று தெரியாது. என் அப்பா வாங்கிய அன்று 1ம் பிரதிவாதி அதே தினத்தில் மற்றோரு பாகமான 1 ஏக்கர் 21 சென்டை மற்றொரு ஆவணம் மூலம் வாங்கினார். அவரும் மூல ஆவணங்களை வாங்கி பார்த்தாரா என்று தெரியவில்லை. ராசம்மாள் என்பவர் முத்து கவுண்டரின் மகள்.

மீதி 2 ஏக்கர் 43 சென்ட் ராசம்மாள் கிரயத்திற்கு வாங்கியதாகும். ராசம்மாள் கிரயம் பெற்ற பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அந்த ஆவணம் என்னிடம் தான் உள்ளது. நல்லாம்பட்டி பேங்க் ஆப் இந்தியா வங்கி கிளையில் பயிர் கடன் பெறுவதற்காக வைத்துள்ளேன். ராசம்மாள் 2 ஏக்கர் 43 சென்ட் கிரயம் பெறும் முன்பு அவர் ராமசாமி பிள்ளை வகையறாவிடமிருந்து மூல பத்திரங்களை வாங்கி பார்த்தாரா இல்லையா என்று நான் ராசம்மாளை விசாரிக்கவில்லை. என் தந்தை முத்துக்கவுண்டா இறந்த பின் அவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 21 செனட்டில் ராசமமாளுக்கு பாகம் வரும். இந்த விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை. சாட்சி மீண்டும் கூறுகிறார். ராசம்மாளுக்கு முத்துகவுண்டர் சொத்துக்களில் இருந்து பாகம் வருமா என்று தெரியாது. ராசம்மாளின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். ராசம்மாளுக்கு பங்கு உண்டு என்றும், அவரின் வாரிசுகளுக்கு முத்து கவுண்டரின் சொத்துக்களில் பங்கு வருமா வராதா என்று என் வழக்கறிஞரிம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. நான் வழக்கே தவறாக போட்டுள்ளேன் என்றும் ராசம்மாளின் வாரிசுகளுக்கும முத்து கவுண்டர் மூலம் பாகம் வரும் என்றால் வந்தால் அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். 9 ஏக்கர் 73 சென்ட் சொத்திற்கு மேல்புறம் ஒரு வண்டித் தடம் உள்ளது. அந்த வண்டிததடத்தின் அகலம் சுமார் 40 அடி இருக்கும். அந்த வண்டித் தடம் இறுதியாக பிரப் நகர் க்கு செல்கிறது. 9 ஏக்கர் 73 சென்டிற்கு தென்புறம் வண்டித் தடம் இல்லை. 9 ஏக்கர் 73 சென்டின் தென்புறம் என் பட்டா பூமியல் ஒரு வண்டித் தடம் செல்கிறது. அதில் நான் மட்டுமே செல்கிறேன். என்னை தவிர அந்த தென்புற பாதையில் ராமசாமி பிள்ளை வகையறாவிற்கும் நடக்கும் பாத்தியம் உள்ளது. 9 ஏக்கர் 73 செனட் டின் கிழபுறம ராமசாமி வகையறாவிற்கு நிலம் இருந்தது. அதை விற்று விட்டார்கள். தென்புறம் இருக்கும் வண்டித்த தடத்திற்கு தென்புறம் எங்கள் குடும்பத்திற்கு மட்டும் பாத்தியப்பட்ட சுமார் 2 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த தோட்டத்தின் பெயர் இச்சிக்காடு. இச்சிக்காடடிற்கு தெற்கே உள்ளது குடுவை கிணற்று தோட்டம். அதில் சுமார் 2 ஏக்கர் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியம். அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. அதை சேர்க்க வேண்டிய அவசியமில்லை. அந்த சொத்துக்களை பொதுவில் தான் அனுபவிக்கிறோம். அந்த சொத்துக்களை நானும் 1 முதல் 5 பிரதிவாதிகளும் பொதுவில் அனுபவிகிகறோம. (இந்த கேள்வியை எழுப்ப வாதி தரப்பில் ஆட்சேபணை எழுப்பப்பட்டது). நான் தாவா சொத்தை கிரயம் பெறும்போது வில்லங்க சான்று எடுத்து பார்க்கவில்லை. நான் கிரயம் வாங்கிய அன்று தான் ராசம்மாள் வகையறாவிடமிருந்து 2ம் பிரதிவாதி ராசம்மாள்

*வகையறாவிடமிருந்து வாங்கினார். இருவரும் தனித்தனி கிரயங்கள் மூலம் சேர்ந்து வாங்கினோம். உம் பிரதிவாதியிம் கிரயம் பெற்ற அன்று வில்லங்க சான்று வாங்கி பார்க்கவில்லை. முத்து கவுண்டர் கிரயம் வாங்கிய பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை. எனக்கு படிக்க தெரியாது.*

*(வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)*

- Uploaded by

SS